# 20

# சிலுவையும் சிங்காசனமும்

## Cross & Crown

கிறிஸ்துவின் பாடுகள் பற்றிய புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் பலவற்றில் அவரது இரண்டாம் வருகையும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றைத் தியானிப்பது அகத்தூண்டுதலாய் அமையும்.

1) *சீடரிடம் இயேசு சொன்னது:* ''இது முதல் இந்தத் திராட்சைப்பழ ரசத்தைப் புதியதாய் உங்களுடன் என் பிதாவின் ***இராஜ்யத்தில்*** நான் குடிக்கும் நாள்வரை இதைக் குடிப்பதில்லை'' (மத் 26:29; மாற் 14:25; லூக் 22:14-18).

   *விசுவாசிகளுக்குப் பவுல் எழுதியது:* ''நீங்கள் இந்த அப்பத்தைச் சாப்பிட்டு, இந்தப் பாத்திரத்தில் குடிக்கும்போதெல்லாம் ***கர்த்தர் வரும்வரை*** அவரது இறப்பைத் தெரிவிக்கிறீர்கள்'' (1 கொரி 11:26).

2) *சீடரிடம் இயேசு சொன்னது:* ''எனக்கு ஏற்பட்ட சோதனைகளில் என்னோடு தொடர்ந்து நின்றவர்கள் நீங்களே. ஆகையால், என் பிதா எனக்கு ஓர் ***இராஜ்யத்தைக்*** கொடுத்திருப்பதுபோல் நானும் உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் என் ***இராஜ்யத்தில்*** என் பந்தியில் சாப்பிட்டுக் குடித்து, இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரங்களையும் நியாயம் தீர்க்கிறவர்களாய்ச் ***சிங்காசனங்கள்*** மேல் உட்காருவீர்கள்'' (லூக் 22:28-30).

   *இயேசு:* ''பிதாவே, நீர் எனக்குத் தந்த எனது ***மகிமையை*** நீர் எனக்குத் தந்தவர்கள் பார்க்கும்படி, நான் எங்கு இருக்கிறேனோ அங்கு அவர்களும் என்னுடன் இருக்க விரும்புகிறேன்'' (யோ 17:24).

3) *பிலாத்துவிடம் இயேசு சொன்னது:* ''என் ***இராஜ்யம்*** இவ்வுலகிற்குரியதல்ல, என் ***இராஜ்யம்*** இவ்வுலகிற்கு உரியதென்றால், நான் யூதரிடம் ஒப்படைக்கப்படாதபடி என் ஊழியர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ***இராஜ்யம்*** இவ்விடத்திற்குரியதல்ல'' (யோ 18:36).

4) *பிரதான ஆசாரியனிடம் இயேசு சொன்னது:* ''மனுமகன் சர்வ வல்லவரின் வலது பக்கத்தில் அமர்ந்திருப்பதையும் வானத்தின் மேகங்கள் மீது ***வருவதையும்*** இதுமுதல் காண்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத் 26:64; மாற் 14:61,62; லூக் 22:67-69).

5) *எருசலேமின் மாதுக்களிடம் இயேசு சொன்னது:* ''நீங்கள் எனக்காய் அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். இதோ, மலடிகள் பாக்கியவதிகள் என்று சொல்லப்படும் ***நாட்கள் வரும்''*** (லூக் 23:28-31; மத் 24:19-21).

6) *இயேசுவிடம் குற்றவாளிகளில் ஒருவன் வேண்டியது:* ''ஆண்டவரே, நீர் உமது ***இராஜ்யத்தில்*** வரும்போது அடியேனை நினைத்துக்கொள்ளும்'' (லூக் 23:42; ஏசா 53:11).

7) ''இயேசு மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஆவியை விட்டார் ... அப்பொழுது கல்லறைகள் திறந்தன; இறந்த பல இறைமக்களது உடல்கள் எழுப்பப்பட்டன. அவரது ***உயிர்த்தெழுதலுக்குப்*** பின்னர் இவர்கள் கல்லறைகளிலிருந்து வெளிவந்து பரிசுத்த நகருக்குச் சென்று பலருக்குத் தோன்றினர்'' (மத் 27:50-53).

8) ''நண்பகல் பன்னிரண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை பூவுலகெங்கும் இருள் உண்டாயிற்று'' (மத் 27:45; மாற் 15:33; லூக் 23:44,45).

   ***அந்நாளில்*** நான் மதியத்தில் சூரியனை அஸ்தமிக்கப்பண்ணி, பட்டப்பகலில் நாட்டை இருட்டாக்குவேன்'' (ஆமோஸ் 8:9).

   ***''கடைசி நாட்களில் ... கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள்*** வருமுன் சூரியன் இருளாகவும் சந்திரன் இரத்தமாகவும் மாறும் ... என்று தேவன் சொல்லியிருக்கிறார்'' (அப் 2:17,20).

9) ''யோசேப்பு என்று பெயருள்ள ஓர் ஆலோசனைச் சங்கத்தினன் இருந்தான்; அவன் உத்தமனும் நீதிமானுமாயிருந்தான். அவன் யூதரது நகர்களில் ஒன்றாகிய அரிமத்தியாவிலிருந்து வந்தவனும், தேவனது ***இராஜ்யத்திற்காய்க்*** காத்திருந்தவனும், யூதரது ஆலோசனைக்கும் செயலுக்கும் உடன்படாதவனுமாயிருந்தான். அவன் பிலாத்துவிடம் சென்று இயேசுவின் உடலைக் கேட்டு வாங்கினான்'' (லூக் 23:50-52; மாற் 15:43).

10) *சீடரைப் பார்த்து விண்தூதர் இருவர் சொன்னது:* ''கலிலேயராகிய மனிதரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணார்ந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடமிருந்து வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசு வானவர் எப்படி உங்கள் கண்களுக்குமுன் வானத்திற்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் ***வருவார்''*** (அப் 1:11).

*தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதியது:* ''நாம் அவருடன் இறந்தால், அவரோடு ***உயிர்த்தும்*** இருப்போம். அவரோடு பாடுகளைச் சகித்தால் அவரோடு ***ஆளுகையும்*** செய்வோம்'' (2 தீமோ 2:11,12அ).

சிலுவை சுமப்போம்;
சிங்காசனத்தில் சுகிப்போம்!

Bear the CROSS;
Wear the CROWN!

*(இந்த 20 சுருக்கக் குறிப்புகளும் கட்டுரைகளும் **ஆங்கிலத்தில்** ஆசிரியரது www.stanleyonbible.com என்ற இணையதளத்தில் Online Letter 97இன் இணைப்புகளாய்க் கொடுக்கப்பட்டுள்ளன. இலவசமாய் இறக்கம் செய்துகொள்ளலாம்.)*